**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 52 of 2022

Deposition of P.W. 1

Name of the Witness: திரு.அன்பழகன்

Date : 23.02.2026

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

6) என் அப்பா தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். என் அப்பாவிற்கு வயதாகி விட்டதால் அவரை நான் விசாரிக்க போவதில்லை. வா..சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் பற்றி எனக்கு நேரடியாக தெரியும். அந்த கிரைய ஒப்பந்தத்திற்கான முத்திரை தாள் 20.12.2018ல் என் அப்பா குஞ்சப்பன் பெயரில் தடங்கத்தில் குமார் முத்திரை தாள் விற்பனையாளரிடம் வாங்கப்பட்டது. தாவா கிரைய ஒப்பந்தம் 03.02.2019ல் எழுதப்பட்டது. 20.12.2018லே பேச்சு வார்த்தை நடந்தது. அதனால் அப்போதே முத்திரை தாள் வாங்கப்பட்டது. பொங்கல் கழித்து பேசுவதாகவும், பின்னர் வீட்டில் கலந்து பேசுவதாக சொன்னதால் கால தாமதம் ஏற்பட்டது.

7) வா.சா.ஆ.1 பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் அது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 ஆவணங்கள் என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. என் அப்பா பேரில் ஏற்படுத்தியதாக கூறப்படும் வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் அதனை சார்ந்து ஏற்பட்ட

ஆவணங்கள் அனைத்தும் சட்டப்படியான ஆவணம் இல்லை என்றால் சரியல்ல.

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.